நாள் - 25.02.2026

<u>**C.C. No**.12/2025</u>

அ.சா.2-பாலசுப்ரமணியம், த/பெ. மயில்சாமி

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act**, 1969 (**Central Act** 44 **of** 1969) **on the** 25th **day of February** 2026.

சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் இன்று குறுக்கு விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. முருகேசன் எனக்கு உறவு முறை கிடையாது. எதிரிகளுக்கும் முருகேசன் அவர்களுக்கும் இடம் சம்பந்தமாக பிரச்சனை இருந்து வரும் விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் டிராக்டர் ஓட்டி தொழில் செய்து வருகிறேன். சம்பவ தேதி மற்றும் வருடம் ஞாபகம் இல்லை. வெகு நாட்கள் ஆகிவிட்டது. சம்பவத்தின் பொழுது டிராக்டர் நான் தான் ஒட்டி வந்தேன் என்றால் சரிதான். டிராக்டரில் யார் யார் என்னுடன் இருந்தார்கள் என முதல் விசாரணையில் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். முருகேசன் அமர்ந்திருந்தார், மற்ற யார் அமர்ந்திருந்தார்கள் என ஞாபகம் இல்லை. சம்பவமானது பொதுத்தடத்தில் எந்த இடத்தில் நடைபெற்றது என குறிப்பிட்டு சொல்லி உள்ளோமா என்றால் சொல்லவில்லை. என்னுடைய டிராக்டரின் பதிவு எண் போலீசார் விசாரணையின் பொழுது குறிப்பிட்டு சொல்லி உள்ளேனா என ஞாபகம் இல்லை.

2. மேலும் என்னுடைய டிராக்டரில் எந்த டயரில் காற்று பிடுங்கி விட்டார்கள் என குறிப்பிட்டு சொல்லி உள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. பிரச்சனை நடந்த பொழுது ஆறு அல்லது ஏழு நபர்கள் இருந்தோம். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் நான் முருகேசன் தோட்டத்தில் வேலை செய்து வருவதால் அவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ARUNKUMAR T
Digitally signed by ARUNKUMAR T
Date: 2026.02.25 18:12:10 +0530

**Signature of Witness** **நீதித்துறை நடுவர்**

**சூலூர்**